# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

*India's National Spiritual Newspaper*

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE (ECHO GROUP)

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Tamil | ₹ 10/-

Vol. XXVII YEAR OF OUR LORD JESUS CHRIST, MAY 2022 No. 5


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

**நீதிமொழிகள் 22:1-10**

1. திரளான ஐசுவரியத்தைப்பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்துகொள்ளப்படத் தக்கது; பொன் வெள்ளியைப் பார்க்கிலும் தயையே நலம்.
2. ஐசுவரியவானும் தரித்திரனும் ஒருவரை யொருவர் சந்திக்கிறார்கள்; அவர்கள் அனைவரையும் உண்டாக்கினவர் **கர்த்தர்.**
3. விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான்; பேதைகள் நெடுகப் போய் தண்டிக்கப்படுகிறார்கள்.
4. தாழ்மைக்கும் **கர்த்தருக்குப்** பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்.
5. மாறுபாடுள்ளவனுடைய வழியிலே முள்ளுகளும் கண்ணிகளுமுண்டு; தன் ஆத்துமாவைக் காக்கிறவன் அவைகளுக்குத் தூரமாய் விலகிப் போவான்.
6. பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்.
7. ஐசுவரியவான் தரித்திரனை ஆளுகிறான்; கடன்வாங்கினவன் கடன்கொடுத்தவனுக்கு அடிமை.
8. அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான்; அவன் உக்கிரத்தின் மிலாறு ஒழியும்.
9. கருணைக்கண்ணன் ஆசீர்வதிக்கப் படுவான்; அவன் தன் ஆகாரத்தில் தரித்திரனுக்குக் கொடுக்கிறான்.
10. பரியாசக்காரனைத் துரத்திவிடு: அப்பொழுது வாது நீங்கும், விரோதமும் அவமானமும் ஒழியும்.



## உலகத்தின் முடிவு நாட்களில் நாம் வசிக்கின்றோமா?


சகோ. மனுவேல் எம். பால்ராஜ்


ரஷ்யா (Russia) தனது அண்டை நாடான உக்ரைன் (Ukraine) மீது தாக்குதல் நடத்தி வருவதால் உலகமே பெரும்பாதிப்பிற்குள்ளாகி இருக்கிறது. பிப்ரவரி 26, 2022 இல் தொடங்கப்பட்ட யுத்தம் தொடர்ந்து நடந்து வருகிறது. வெளிநாடுகளிலிருந்து உக்ரைன் நாட்டிற்குச் சென்று உயர்படிப்பு படித்துவந்த மாணவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டாக மார்ச் 5–ம் தேதி 2022 அன்று 7 மணி நேரம் ரஷ்யாவால் போர் நிறுத்தம் செய்யப்பட்டது. முதல்நாள் போரில் ரஷ்யா எளிதாக தாக்குதல் நடத்தியது. ஆனால், தொடர்ந்து நடைபெற்று வரும் போரில் ரஷ்யா கடினமான தடையை சந்தித்து வருகிறது. தற்போது, போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து இராணுவத் தளவாடங்களை உக்ரைன் பெற்று வந்தாலும், தொடக்கத்தில் ரஷ்யாவின் தாக்குதலுக்கு உக்ரைனால் ஈடு கொடுக்க முடியவில்லை.

உக்ரைன் மீது ரஷ்யாவின் கோபம் என்னவென்றால், உக்ரைன் ஐரோப்பிய ஐக்கியத்திற்குள் (European Union - EU) சேரப்போவதாகவும், அதனைத் தொடர்ந்து 'நேட்டோ' (NATO) கூட்டமைப்பில் இணைந்துவிடும் என்ற பயம் ரஷ்யாவை வாட்டியது. அப்படி நடந்தால் ரஷ்யாவின் எல்லைகள் 'நேட்டோ' படைகளுக்கு எளிதான இலக்கு ஆகிவிடும் என்று ரஷ்யா கருதியது!

ஆனால், ரஷ்யாவின் இந்த பயம் காரணமற்றது. சுதந்திர நாடான உக்ரைன் தனது விருப்பத்தின்படி எந்தவொரு கூட்டமைப்பிலும் சேரமுடியும். தற்போது கூட நேட்டோ கூட்டமைப்பு நாடுகளில் சில, ரஷ்யா எல்லைக்கருகில் இருந்து வருகின்றன. அவர் களிடையே எந்த கிளர்ச்சியும், இதுவரையிலும் ஏற்படவில்லை. ஆகவே, உக்ரைன் மீதான ரஷ்யாவின் பயத்திற்கு அடிப்படைக்காரணம் ஏதும் இல்லை. தற்போதைய யுத்தம் ரஷ்யாவின் ஆணவத்தைத்தான் வெளிப்படுத்துகிறது.

தற்போது உக்ரைன் ஐரோப்பிய ஐக்கியத்தில் இணைந்து விட்டது.

அமெரிக்காவும், சில ஐரோப்பிய ஐக்கியத்திற்குட்பட்ட உறுப்பு நாடுகளும் ரஷ்யாவின் போர் முன்னெடுப்பை வன்மையாக கண்டித்துள்ளன. ஆகவே, ரஷ்யாவிற்கு எதிராக அனேக பொருளாதாரத் தடைகளை (Sanctions) விதித்துள்ளன. இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்கி வருகின்றன. அமெரிக்க அதிபர் ஜோ பைடன் சொல்லுகிறார், நேட்டோ நாடுகள் நேரடி இராணுவ நடவடிக்கைகளில் இறங்குவதை தவிர்த்து வருகின்றன; காரணம் அது மூன்றாம் உலகப்போருக்கு வழிவகுக்கும். தற்போதைய நிலை இவ்வாறாக இருக்கலாம்; ஆனால் மாறிவரும் போர்க்கள மாற்றங்களுக்கேற்ப முடிவுகள் மாறலாம்!

அமெரிக்க அதிபரும், ஒருசில ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் பிரசெல்சில், கூடி நிலைமையை உற்றுக் கவனித்து வருகிறார்கள். உக்ரைனின் பட்டணங்கள் மீது ரஷ்யா குண்டு மழை பெய்து தகர்த்து வருகின்றது. ரஷ்யா அதிநவீன போர் விமானங்களால் குண்டுகளையும் பொழிந்து வருகின்றது.

யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு உலகநாடுகளும், சர்வதேச நீதிமன்றமும் அழைப்பு விடுத்தபோதிலும் ரஷ்யா கேட்பதாக இல்லை. அழிவிற்கு முன் அகந்தை!

நகைச்சுவை நடிகனாக இருந்து, அரசியல்வாதியாக மாறிய உக்ரைன் அதிபர் தற்போது யுத்த வல்லுநராக (war hero) மாறிவிட்டார் எனலாம். உக்ரைன் மக்கள் யாவரும் அவருக்குப்பின் அணிவகுத்து நிற்கின்றனர். சமீபத்தில் இஸ்ரவேல் நாடாளுமன்றத்தில் தொலைக்காட்சி மூலம் உரையாற்றிய இவர், தான் ஒரு யூதன் என்றும் தனக்கு உதவுங்கள் என்றும் கேட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் அழைப்பில், இஸ்ரேலியப் பிரதமர் 'நப்தலி பென்னட்' (Naftali Bennett) ஏப்ரல் 2–ம் தேதி


தொடர்ச்சி 4–ம் பக்கம்.....

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...

**கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது;**
**கர்த்தரின் வலதுகரம் பராக்கிமஞ்செய்யும்.**
**– சங்கீதம் 118:16**



### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITOR**
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

**MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**
Bro. N. Prakasam, M.A., General Manager

**EDITORIAL BOARD**
Sis. Jesy Veena Sam
Bro. M. Paulraj, M.A., B.Ed.
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.

**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**E.mail ID**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call


*கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே!*

ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்.

எங்களுக்காக நீங்கள் ஏறெடுக்கிற ஜெபங்களும், செய்கிற ஒத்தாசைகளும் நாளுக்கு நாள் எங்களை ஊழியத்தில் மென்மேலும் உற்சாகப்படுத்திவருகிறது. எனவே நாங்கள் உங்களுக்காக இன்னும் அதிகமாக ஜெபித்து வருகிறோம். மட்டுமின்றி "உங்களுக்கு நன்றி!" கூறுவதில் பெருமிதம் கொள்ளுகிறோம்.

வருகின்ற மே மாதம், இந்தியாவில் உள்ள பிள்ளைகளும், வாலிபர்களும் பள்ளி மற்றும் கல்லூரிகளிலிருந்து விடுமுறை பெற்று மகிழ்ச்சியுடன் இருக்கும் நாட்கள். எனவே, நீங்களும், உங்கள் பிள்ளைகளும் இந்த நாட்களை வீணாக செலவழிக்காமலும், தேவையற்ற இடங்களுக்கு செல்லாமலும், தேவனுக்காக எதையாவது இலாபகரமாகச் செய்ய முன்வாருங்கள். உங்கள் ஆலயங்களுக்குச் சென்று அங்கு நடக்கும் விசேஷ ஆராதனைகளிலும், நிகழ்ச்சிகளிலும், பராமரிப்புப் பணிகளிலும் கலந்து கொண்டு ஆண்டவரைப் பிரியப்படுத்த முன்வாருங்கள். இதனால் ஆண்டவர் உங்கள் குடும்பங்களை ஆசீர்வதிப்பார். கர்த்தர் உங்களுக்கும், உங்கள் குடும்பங்களுக்கும் பல நன்மைகளைச் செய்திருக்கிறாரே. அவர் செய்த சகல நன்மைகளையும் மறவாதீர்கள்.

உங்கள் ஊழியர்களாகிய நாங்களும் இந்த மாதம் மிக மிக உற்சாகத்துடனும், உத்வேகத்துடனும் செயல்படுகிறோம். நமது ஆங்கிலமொழி பாடமுறை உயர்நிலைப்பள்ளி, மாலைநேரத் தமிழ் வேதாகமக் கல்லூரி, காணொளி இணைய வழி (Online) வேதாகம வகுப்புகள், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளிலான தொலைதூர வேதாகமக் கல்வி வகுப்புகள், இவை யாவும் மிக சிறப்புடன் நடைபெறுகின்றன. நமது அதிகப்படியான சபை ஆராதனைகள் மற்றும் முழுநேர இந்தி வேதாகமக்கல்லூரி யாவும் அடுத்த மாதம் முதல் செயல்படுத்தப்பட வேண்டும். இவை செவ்வனே செயல்படுத்தப்பட உங்கள் ஜெபம் தேவை.

நாங்கள் கேட்காமலேயே எங்கள் தேவைகளை நன்கு அறிந்து வங்கி பரிமாற்றம் மூலமாகவும், Gpay மற்றும் மணி ஆர்டர், வங்கிக் காசோலைகள் (Cheque) மற்றும் D.D மூலமாகவும் எங்களுக்கு காணிக்கைகளை அனுப்பி உற்சாகப்படுத்துகிற உங்களை நாங்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஆசீர்வதிக்கிறோம். நன்மையும், கிருபையும் உங்களைத் தொடருவதாக!

ஊழியர்களாகிய எங்களில் சிலரும், குடும்பத்தினரும் சரீரப்பிரகாரமாக பெலவீனமாயிருக்கிறோம். விசேஷமாக, நம் சகோதரர்கள் மனுவேல் எம். பால்ராஜ் மற்றும் போதகர் எம். முத்து ஆகியோருடைய சுகத்திற்காக ஊக்கமாக ஜெபியுங்கள்.

நாங்கள் உங்களை நேசித்து உங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கிறோம். உங்கள் கடிதங்கள், மின்னஞ்சல்கள், தொலைபேசி அழைப்புகள், உதவிகள் யாவற்றிற்கும் நன்றி தெரிவிக்கிறோம். அவற்றில் அடங்கியுள்ள விண்ணப்பங்களையும் மற்றும் மன்றாட்டுகளையும் தேவனுக்குத் தெரியப்படுத்துகிறோம்.

தேவ கிருபை உங்களோடு இருப்பதாக! ஆமென்.


கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**
(+91) 98412 71858 / 98410 71858, மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தியா வரவிருந்தார். மாறிவரும் சூழ்நிலையில் இந்த சந்திப்பு நடைபெறவில்லை. ரஷ்யா–உக்ரைன் யுத்தத்தில் இந்தியா நடுநிலை வகித்து வருகிறது. எனினும் உக்ரைனுக்கு மனிதாபிமான உதவிகள் செய்து வருகிறது. இந்தியாவை ரஷ்யாவின் பிடியிலிருந்து விடுவிக்க அமெரிக்கா பயங்கர முயற்சியில் உள்ளது. சீனா இந்தியாவைத் தாக்கினால் அமெரிக்கா இந்தியாவுக்கு ஆதரவாக வருவதாக உறுதியளித்துள்ளது. இந்திய பிரதமருடன் அமெரிக்க அதிபர் மெய்நிகரில் (virtual) 12.04.2022 இல் சந்தித்துள்ளார். மெய்நிகரில் சந்திக்கலாம் என்று ரஷ்ய அதிபர் புட்டினுக்கு அமெரிக்க அதிபர் விடுத்த அழைப்பை புட்டின் ஏற்றுள்ளார்!

46 ஆவது நாளைக் கடந்த இந்த யுத்தம், உலக யுத்தமாக மாறக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. அப்படி மாறும்போது, ரஷ்யா தங்கள் பிரதான எதிரியான இஸ்ரேலைத் தாக்கும். அப்படி தாக்குதல் நடக்கும்போது, அது உலகப்போராக வெடிக்கும்! உக்ரைன் அதிபர் விளாடிமிர் செலன்ஸ்கி (Volodymyr Zelenskyy) கூற்றுப்படி, எந்த நாட்டையும் அல்லது நாடுகளையும் எதிர் கொள்ளும் இராணுவ வலிமை இஸ்ரேலுக்கு உண்டு என்கிறார்! இஸ்ரேலைத் தாக்கும் நிலையில் வரும் நாட்களில் இந்த யுத்தம் எந்த நிலைக்குச் செல்லும் என யூகிக்க முடியாது!

தற்போது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தங்கள் தயக்கத்தை விட்டுவிட்டு உக்ரைனுக்கு அதிநவீன ஆயுதங்களைக் குவித்து வருகின்றன. இவற்றை ரஷ்யாவால் தாக்குபிடிக்க முடியவில்லை! திணறி வருகிறது! எனினும் ரஷ்யா யுத்தத்தை இதுவரையிலும் நிறுத்தவில்லை.

சத்திய வேதத்தின்படி, அர்மகெதோன் யுத்தத்திற்கு முன், ரஷ்யா இஸ்ரவேலைத் தாக்கும். யுத்தத்தில் இஸ்ரவேலும் அதன் நேசநாடுகளும் வெற்றிபெறும். யுத்தத்திற்குப் பயன்படுத்தப்பட்டு அழிந்த ஆயுத தளவாடங்களை இஸ்ரவேல் ஜனங்கள் 7 வருடங்கள் அடுப்பெரிக்கப் பயன்படுத்துவார்கள்! ரஷ்யா தனது விமானங்கள் மற்றும் யுத்த தளவாடங்களை நார்வே நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒருவகை மரத்தைக்கொண்டு செய்து வருகிறார்களாம். இந்த விசேஷித்த மரம் 7 மடங்கு உறுதியுடையதாம்; ஆனால் கனம் (weight) மிகவும் குறைவு! (எசேக்கியேல் அதிகாரங்கள் 38&39) அனைத்தும் கர்த்தரின் சித்தத்தின்படியே நடைபெறும் என்பதை அறிந்திருக்கிறோம்! உலக மக்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போமாக!

சில வருடங்களுக்குமுன் எசேக்கியேல் 38&39 அதிகாரங்கள் வாசித்தால் நம்மில் பலருக்குப் புரிவதில்லை. ஏதோ யுத்தத்தைப் பற்றிக் கூறுகிறார்கள் என்று கூறி கடந்துபோவோம். ஆனால், தற்போது கர்த்தரின் வார்த்தைகள் அப்படியே நடக்கப்போவதை நமது கண்களால் பார்க்கவிருக்கிறோம்!

மேற்கூறப்பட்டுள்ள யுத்தங்கள் ஒரு முடிவிற்கு வந்தாலும், கர்த்தரின் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்கள் அனைத்தும், அதாவது 7 முத்திரைகள் உடைப்பது, 7 எக்காளங்களை ஒலிப்பது மற்றும் 7 கோபக்கலசங்களை பூமியின்மேல் ஊற்றுதல் ஆகிய யாவும் வரிசையும் கிரமமுமாக கர்த்தரின் திட்டப்படியே நடைபெறும்!

கர்த்தரின் முதல் நான்கு முத்திரைகள் உடைக்கப்பட்டுவிட்டதால் இந்த உலகத்தில் நடக்க வேண்டிய உபாதைகளை நாம் இந்நாட்களில் அனுபவித்து வருகிறோம். 5–வது முத்திரை உபத்திரவ காலம் தொடங்குவதற்கு சற்றுமுன் உடைக்கப்படவேண்டும். அல்லது உபத்திரவ காலத்தின் தொடக்கத்தில் நடக்க வேண்டும். ஏனெனில், இப்போது கிறிஸ்துவுக்காகவும், அவரது வசனத்திற்காகவும் மரித்தவர்கள் கர்த்தரின் வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவர். ஆனால், கைவிடப்பட்டவர்களில் சிலர் உபத்திரவகாலத்தில் கர்த்தருக்காக வைராக்கியத்துடன் நிற்பார்கள். இவர்கள் அந்திக்கிறிஸ்துவால் கொலை செய்யப்படுவார்கள். யோவான் பரலோகத்தில் கண்ட பலிபீடத்தின்கீழ் இருந்தவர்கள் உபத்திரவ காலத்தின் முதற்பகுதியில் மரித்தவர்களே!

முதல் நான்கு முத்திரைகளும் உடைக்கப்பட்டுள்ள இந்நாட்களில் நாம் வாழ்ந்து வருகிறோம் என்பதை நான் பலமாக நம்புகிறேன். இதற்கான அடையாளங்கள் இயற்கையில் பிரதிபலிப்பதைப் பார்க்கிறோம். தற்போது நடக்கும் ரஷ்யா–உக்ரைன் யுத்தம், இயேசு கிறிஸ்து முன்னறிவித்த அடையாளங்களுள் ஒன்று. அதாவது நீங்கள் யுத்தங்களையும், அதன் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் (மத்தேயு 24:6). கடைசி காலத்தில் நடைபெறும் காரியங்களை, அதாவது உபத்திரவ காலங்கள் உட்பட அனைத்தையும் அன்பு ஆண்டவர் 2000 வருடங்களுக்கு முன்பே உலகத்திற்கு தெரிவித்துள்ளார்.

உலகத்தின் முடிவும் கர்த்தரின் வருகையும் பற்றி ஆண்டவர் குறிப்பிடும்போது, நோவாவின் காலத்தில் தேவன் உலகத்தை அழித்ததை ஒப்பிட்டுக் கூறுகிறார். கர்த்தர், நோவாவை அழைத்து அவனையும், அவன் குடும்பத்தினரையும் காப்பாற்ற ஒரு பேழையைக் கட்டுமாறு பணித்தார். கர்த்தர் கட்டளைப்படியே நோவாவும், அவன் குடும்பத்தினரும் பேழையைக் கட்டும் பணியைத் தொடங்கினார்கள். வேத வல்லுனர்கள், நோவா அந்தப் பேழையைக் கட்ட 100 வருடங்கள் ஆயின என கணக்கிடுகிறார்கள். அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் நோவாவைப் பார்த்து கேலி செய்தார்களாம்! எனினும், மனந்திரும்புங்கள், நீங்கள் அழிந்து போகாதபடிக்கு பேழையினுள் பிரவேசியுங்கள் என நோவா அழைப்பு கொடுத்துள்ளார்! (2 பேதுரு 2:5). ஆனால், ஒருவரும் நோவாவின் அழைப்பிற்கு செவிமடுக்கவில்லை! கர்த்தர் கட்டளையிட்டபடியே குறித்த காலத்திற்குள் பேழை நோவாவால் கட்டி முடிக்கப்பட்டது.

**நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்** (மத்தேயு 24:37–39).

தற்போதைய உலகம் எந்தவிதத்திலும் நோவாவின் நாட்களைவிட நன்றாக இல்லை. உலகம் முழுவதும் தீமையால் நிறைந்து சீர்கெட்டுக் கிடக்கிறது; இது கர்த்தரின் தலையிடுதலுக்கு (intervention) அழைப்பு விடுப்பதாகவே உள்ளது. மெய்யாகவே நாம் உலகத்தின் கடைசி நாட்களில் வாழ்ந்து வருகிறோம்!

தற்போதைய கோடி ரூபாய் வினா (Million Dollar Question) என்னவென்றால், இயேசு எப்போது வருவார்? இயேசு, அந்திக்கிறிஸ்து வெளிப்படுவதற்கு முன் வருவார் என பலர் நம்புகிறார்கள். சிலர் 2 தெசலோனிக்கேயர் 2:1–3 வசனங்களைச் சுட்டிக்காட்டி, இயேசு உபத்திரவக்காலத்தில் வருவார் என்கிறார்கள். அந்திக்கிறிஸ்து எப்போது வெளிப்படுவான் என்பது ஒரு விவாதத்திற்குரிய பொருளாகி விட்டது! எப்படியும் இயேசு உலகத்திலுள்ள அனைத்து மக்களும் பார்க்கத்தக்கதாக தமது பகிரங்க வருகையில், ஒலிவ மலையில் பரிசுத்தவான்களோடு இறங்கி, அந்திக்கிறிஸ்துவை அர்மகெதோனில் எதிர்கொள்வார்!

முத்திரை எப்போது உடைக்கப்பட்டது? இயேசு தாமே சொன்னார்; அனேகர் தமது நாமத்தில் வெளிப்பட்டு, "தாங்களே இயேசு என்று சொல்லி, அனேகரை ஏமாற்றுவார்கள்" (மத்தேயு 24:5). இது அந்திக்கிறிஸ்துவின் செயல்களில் ஒன்றாகும்! அந்திக்கிறிஸ்து ஏற்கனவே உலகத்தில் நடமாட்டத்தில் உள்ளான்!

## முதலாவது முத்திரை!

ஆட்டுக்குட்டியானவர் முதலாம் முத்திரையை உடைக்கும்போது, யோவான் ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டார். "... **அதின் மேல் ஏறியிருந்தவன் வில்லைப்பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கீரிடங்கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்**" (வெளிப்படுத்தின விசேஷம் 6:1–2). இந்த வெள்ளைக் குதிரையில் உட்கார்ந்திருந்தவன், அந்திக் கிறிஸ்து அல்ல; ஏனெனில், அவன் மக்கள் மத்தியிலிருந்து பிற்காலத்தில் எழும்புவான். அந்நாட்களில் உலகத்தில் தேசங்களை ஆளுகை செய்யும் அரசனோ, அதிபதியோ, பிரதம மந்திரியோ, இவர்களில் ஒருவனாக இருப்பான். வெளிப்படுத்தின விசேஷம் 6:1–3இல் சொல்லப்பட்டுள்ள இவன் ஏற்கனவே உலகத்தில் வலம் வந்து அநேகரை வஞ்சித்து வருகிறான். முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்போஸ்தலர் யோவான், இவன் அந்திக்கிறிஸ்துவின் ஆவி (spirit) என்று தனது முதலாம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். "**பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது. அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக் காலமென்று அறிகிறோம்**" (1 யோவான் 2:18). பிதாவாகிய தேவனையும், அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் மறுதலிப்பவனே அந்திக்கிறிஸ்து (1 யோவான் 2:22). நாம் இங்கு கண்டபடியே அந்திக்கிறிஸ்து தேசங்களிலிருந்து கடைசி நாட்களில் வெளிப்படுவான் என்றும் யோவான் இங்கு கண்ட அந்திக்கிறிஸ்துக்கள் அவனின் ஆவி! அப்படிப்பட்ட மனிதர்களை நாம் இந்நாட்களில்

உலகத்தில் பார்க்க முடியும். மேலும், வெள்ளைக் குதிரையில் வெளிப்பட்ட இந்த அந்திக்கிறிஸ்துவின் ஆவியை, வெளிப்படுத்தின விசேஷம் 19:11 இல் குறிப்பிடப்பட்டுள்ள மனுஷகுமாரனோடு ஒப்பிட்டு குழப்பக்கூடாது!

## இரண்டாவது முத்திரை!

ஆட்டுக்குட்டியானவர் இரண்டாவது முத்திரையை உடைத்தபோது, இரண்டாம் ஜீவனானது (பிதாவுக்குமுன் பரலோகத்தில் நிற்கும் 4 ஜீவன்களில் ஒன்று): "நீ வந்து பார்" என்று யோவானிடம் சொல்லக்கேட்டார். அப்பொழுது சிவப்பான வேறு ஒரு குதிரை புறப்பட்டது; அதின்மேல் ஏறி இருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைச் செய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்து எடுத்துப்போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஒரு பெரிய பட்டயம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது (வெளிப்படுத்தின விசேஷம் 6:3,4).

அதனால் பூமியிலுள்ள மனிதர்கள் சமாதானம் இழந்து ஒருவரையொருவர் கொலை செய்யலாயினர். இவை இக்காலத்தில் நடைபெற்றுவரும் யுத்தங்களும் தீவிரவாதிகளின் தாக்குதலுமேயாகும். ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே இந்த நிலை பூமியில் இருந்து வருகிறது! பூமியில் அவனே ஈனச் செயலைச் செய்து வருகிறான்.

## மூன்றாவது முத்திரை!

மூன்றாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, கறுப்புக்குதிரையொன்று வெளிப்பட்டு, அதில் ஏறி இருந்தவனுக்கு கையில் தராசு கொடுக்கப்பட்டது. உலகத்தில் பஞ்சத்தை வருஷிக்க அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. இதனை உலகத்தில் பல பகுதிகளிலும் பார்க்க முடிகிறது. ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள பல நாடுகளில் இது வருஷாவருஷம் நடந்து வருகிறது. முக்கிய காரணம் இந்நாடுகளில் மழை சரியாகப் பெய்வதில்லை. தென் ஆப்பிரிக்காவில் கேப் டவுன் (Cape Town) என்ற முக்கிய கடற்கரைப் பட்டணம் உள்ளது. பன்னாட்டு கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படும்போது (International Cricket Matches), இப்பட்டணம் முக்கியமான ஒரு மையமாகத் தேர்வு செய்யப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. ஆனால், இப்பகுதியில் பல வருடங்களாகத் தொடர்ந்து மழை பெய்யாததால், நிலத்தடித் தண்ணீர் வறண்டு போனதால் மக்கள் வாழ்க்கைக்கு ஏற்றதன்று என முடிவு செய்யப்பட்டு, பட்டணம் காலி செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இப்பட்டணம் கிரிக்கெட் ஆடும் மையம் என்ற அந்தஸ்தை இழந்து விட்டது; மக்களே இல்லையென்றால் கிரிக்கெட் மட்டும் எப்படி ஆட முடியும்?

மேலும், எத்தியோப்பியா, சூடான் மற்றும் சோமாலியா போன்ற நாடுகளும் வறட்சியை சந்தித்து வருகின்றன.

எயிட்டி (Haiti) என்ற தீவில் சமீப காலத்தில் ஏற்பட்ட மிகவும் சக்தி வாய்ந்த எரிமலையொன்று வெடித்துச் சிதறியதில், அதனைத் தொடர்ந்து சுனாமி பேரலை உருவாகி அடையாளம் தெரியாத அளவிற்கு அந்த தீவு உருக்குலைந்து போயிற்று! அதனைத் தொடர்ந்து கடுமையான வறட்சி அத்தீவை வறுத்து எடுக்கிறது. மக்கள் தங்கள் காலை உணவிற்காக சேற்றைப் பக்குவப் படுத்தி, கொளுத்தும் வெயிலில் காயவைத்து ரொட்டியாகக் கடித்து உண்கிறார்களாம்!

சமீபத்தில் நம் அண்டை நாடான இலங்கையில் பொருளாதாரச் சீரழிவு ஏற்பட்டு நாடு பெரும் பஞ்சத்தை எதிர்நோக்கி வருகிறது! அங்குள்ள அரசாங்கத்தை எதிர்த்து பொதுமக்கள் பெரிய போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இதேபோன்று ஆப்கானிஸ்தானும் பஞ்சத்தை எதிர்நோக்கிச் செல்கிறது. தற்போதைய மாபெரும் கொள்ளை நோய்க்குப்பின் (Pandemic) உலகம் பெரிய பஞ்சத்தை எதிர்நோக்கும் என உலகத் தலைவர்கள் எச்சரித்து வருகின்றனர்.

உலகப் பெரும் செல்வந்தர்களில் ஒருவரான பில்கேட்ஸின் (Bill Gates) நிறுவனம் அமெரிக்காவில் இலட்சக்கணக்கான ஏக்கர் விளைநிலங்களைக் கொள்முதல் செய்து அவற்றில் பயிர் செய்து வருகிறார்களாம்! இதேபோன்று வேறு அநேக செல்வந்தர்களும் விளைநிலங்களில் பயிர் செய்து வருகிறார்களாம். இவர்கள் யாவரும் தானியச் சந்தையில் (Grain Market) இடம் பிடித்து பெரிய உணவு நிறுவனங்களுக்கு தானியங்கள் மற்றும் உருளைகிழங்கு போன்றவற்றை பெருமளவில் விற்பனை செய்து வருகிறார்களாம்! இதன் எதிரொலியாகவே, சர்வதேச நிறுவனங்களுக்கு (MNCs) உதவுவதற்காக (அவர்கள் விளைநிலங்களைப் பெருமளவில் கொள்முதல் செய்ய) மூன்று விவசாயத் திருத்த மசோதாக்களை இந்தியப் பாராளுமன்றத்தில் கடும் எதிர்ப்புகள் மத்தியில் நிறைவேற்றினார்கள்! ஆனால், வட இந்திய விவசாயிகளின் ஓராண்டிற்கு மேலானத் தொடர்போராட்டத்தின் காரணமாக மூன்று சட்டங்களையும் மத்திய அரசுத் திரும்பப் பெற்றது! ஒரு வருடத்திற்கு மேலான இப்போராட்டங்களில் ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் இறந்து போயினர்.

காரியங்கள் இவ்வாறாக இருந்தாலும், பெரும் முதலாளிகள் ஊடுருவி நிலம் கைகப் படுத்தி பயிர் செய்து விடுவார்கள் எனத் தெரிய வருகிறது! இவர்கள் ஏற்கனவே, இந்தியாவில் (வட இந்தியாவில்) பல இடங்களில் பெரிய பெரிய கிடங்குகளைக் கட்டி விட்டார்களாம்!

இவர்கள் தானியச் சந்தையில் இறங்கி, தானியங்களைப் பெருமளவில் கொள்முதல் செய்து பதுக்கிவைத்து செயற்கையான பஞ்சத்தை ஏற்படுத்துவார்கள்! தற்போது அரிசி கிலோ ரூ.50/–க்கு விற்பனையாகிறது ரூ.500/–க்கும் கிடைக்கப்பெறாத அவல நிலை ஏற்படலாம். இத்தகைய சதிவேலைகள் இவர்களால் ஏற்படக் கூடாது. இவர்கள் நோக்கங்களைக் கர்த்தர் தாறுமாறாக்கி முகத்தில் கரி பூசிவிடுவாராக! நாம் ஜெபிப்போம்! தராசு பஞ்சத்தைக் குறிக்கும். தராசை வைத்துள்ள அந்த மனிதன் ஏற்கனவே உலகத்தின் பல பகுதிகளில் தனது கைவரிசையைக் காட்டி வருகிறான்!

## நான்காவது முத்திரை!

அவர் நான்காவது முத்திரையை உடைக்கும்போது ஒரு மங்கின குதிரையில் (pale horse) ஏறியிருந்தவன் வெளிப்பட்டான். அவனுக்குப்பின் மரணமும், பாதாளமும் பின் சென்றது. அவனுக்கு பூமியிலுள்ள நான்கில் ஒரு பகுதி ஜனங்களை பட்டயத்தாலும், பசியினாலும், மிருகங்கள் மூலம் பரவும் கொள்ளை நோய்களாலும், கொல்ல அதிகாரம் கொடுக்கப்பட்டது. (Spread of pandemic through animals). தற்போதுள்ள கொள்ளை நோயும் ஒரு பிராணி மூலம் (snakes) பரவியதாக சொல்லப்படுகிறது. தேசங்கள் ஒருவருக்கெதிராக ஒருவர் பட்டயத்தை எடுப்பார்கள். நாம் ஏற்கனவே 1918 மற்றும் 1945–ஆம் வருடங்களில் இரண்டு உலகப் போர்களை சந்தித்துள்ளோம். இலட்சக்கணக்கான மக்கள் மரித்துப் போயினர். மேலும், உலகத்தின் பல்வேறு பகுதிகளில் யுத்தங்கள் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் மரித்துப் போயினர். ரஷ்யாவும் உக்ரைனும் தற்போது யுத்தம் செய்து வருகின்றனர். ரஷ்யா முதன்முதலில் யுத்தத்தைத் தொடங்கியது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஐக்கியத்தில் உள்ள நாடுகள் ஆயுதங்களையும் போர்வீரர்களையும் தற்போது அதிகஅளவில் அளித்து உதவி வருகின்றன. யுத்தம் 12.04.2022ன்படி 46 நாட்களைக் கடந்து விட்டது. ரஷ்யா திணறுகிறது! போகிற போக்கைப் பார்க்கும்போது எசேக்கியேல் 38, 39 அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ள யுத்தமாக மாறும் வாய்ப்பு அதிகரித்து வருகிறது. அவ்வாறாயின் இந்த யுத்தம் இஸ்ரவேலுக்கு எதிராக ரஷ்யா யுத்தத்தை முன்னெடுக்கும்! ரஷ்யாவை ஆதரித்து பெலாரஸ், மங்கோலியா, வடகொரியா, வியட்நாம், சிரியா, ஈரான், ஈராக், சவுதி அரேபியா, லெபனான், பாலஸ்தீன், சீனா, பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகள் அணிவகுக்கலாம். இஸ்ரவேலுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஐக்கியத்திலுள்ள நாடுகள், இங்கிலாந்து ஆகியவை அணிவகுக்கும். யுத்தம் இஸ்ரவேலின் மலைகளில் நடக்கும். யுத்தத்தில் கர்த்தரின் கரம் இஸ்ரவேலோடு இருக்கும்! எதிர்ப்பு நாடுகள் திணறும். யுத்தம் ஓரிரு நாட்களில் முடியும்! எதிரிகளின் யுத்தத்தளவாடங்களை இஸ்ரவேலர் 7 வருடங்கள் எரிப்பார்கள். நம்ப முடியவில்லையல்லவா? எசேக்கியேல் 38, 39 அதிகாரங்களைப் படியுங்கள். இவை எதைக் காட்டுகின்றன? கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது. அவர் வருகைக்கு ஆயத்தப்படுங்கள். இனி காலம் செல்லாது!

இவை இப்படி நடந்தாலும், வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள முத்திரைகள் உடைத்தல், எக்காளம் ஊதுதல் மற்றும் கோபக்கலசத்தை பூமியின்மேல் தூதர்களால் ஊற்றப்படுதல் போன்றவை கர்த்தர் முன் குறித்ததுபோல் நடக்கும்!

யுத்தங்களால் ஏற்படும் மரணங்கள் தவிர HIV, HIV1, Influenza (1918), H2N2 (1957), Zika (2018), Flu of 1968 (2020), மற்றும் NIPHA (2021), தற்போதைய கோவிட்–19, போன்றவை பல லட்சம் மக்களைக் கொள்ளை கொண்டன. மேற்கண்ட 'வைரஸ்' (Virus) விலங்குகள் மூலமாகப் பரவுகின்றன. இவை மக்கள் வாழ்க்கையில் சொல்லிமுடியாத அழிவை ஏற்படுத்தியுள்ளன. ஒரு 'வைரஸ்' ஒருமுறை மனிதரைத் தாக்கும்போது குறித்த காலத்துடன் நின்றுவிடாமல் பல வருடங்கள் தொடர்ந்து உலகத்தின் பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது அழிவை ஏற்படுத்திவருகின்றன. இந்த வைரஸ் மனிதர்களால் உருவாக்கப்பட்டு, அவர்களால்

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2022 மே19 முதல் ஜூன் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

மே 19 ⇨ நமது நாட்டில் கோவிட்–19 நோயாளிகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து விட்டதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

மே 20 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. அதற்காக நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

மே 21 ⇨ இந்தக் கொள்ளைநோய் கோவிட் – 19 மத்தியிலும் நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களை** கர்த்தர் ஆசீர்வதித்தார்.

மே 22 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவருக்காகவும் நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

மே 23 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

மே 24 ⇨ எழுப்புதலுக்குரிய புதிய விசுவாசிகளை ஆசீர்வதித்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

மே 25 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** கடந்த மாதம் நிகழ்த்தப்பட்ட ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

மே 26 ⇨ நமது ஊழியப்பிரயாணங்களை ஆசீர்வதித்ததற்காக நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

மே 27 ⇨ நமது **ஹிந்தி இணையவழி இறையியல் வேதாகமக்கல்விமுறையை** ஆசீர்வதித்து வருவதற்காக நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

மே 28 ⇨ நமது நாட்டைக் காத்து வருவதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

மே 29 ⇨ வேதாகம ஆராய்ச்சிக்கான மாநாடுகளை தொடர்ந்து நடத்தி வருவதற்காக நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

மே 30 ⇨ கடந்த மாதத்தில் நமது தேவைகளை நிறைவாக்கிய கிருபைமிகு கர்த்தரைத் துதிப்போம்.

மே 31 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியத்தினை 1969 முதல் இன்றுவரை ஆசீர்வதித்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூன் 01 ⇨ நமது **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** மற்றும் **தொலைதொடர்பு வேதாகமக்கல்வி** முறைகளின் வளர்ச்சிகளுக்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூன் 02 ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப்பட்டதற்காக அவரைத் துதிப்போம்.

ஜூன் 03 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் பாதுகாத்து வருகிறார்.

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஜூன் 04 ⇨ நம்முடைய சுவிசேஷ அச்சகத்திற்காக ஊக்கமாக ஜெபிப்போம்.

ஜூன் 05 ⇨ நமது தங்கும் வசதிகளோடு கூடிய நெகேமியா வேதாகமக் கல்லூரிக்கான மாணவர் சேர்க்கை வெற்றிபெறவேண்டி கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

ஜூன் 06 ⇨ உலகிலுள்ள நாடுகள் அனைத்திற்குள்ளாக சமரசம் நிலவிட ஜெபிப்போம்.

ஜூன் 07 ⇨ கர்த்தரிடம், நமது ஆங்கில இணையாசிரியர் சகோதரர் மனுவேல் எம். பால்ராஜ் அவர்களின் சுகவாழ்வுக்காகவும், நோயின் பாதிப்பிலிருந்து விடுதலை பெறவும் ஜெபிப்போம்.

ஜூன் 08 ⇨ கொரோனா வைரஸ் இவ்வுலகைவிட்டு முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டி மிகுந்த ஊக்கமாக ஜெபிப்போம்.

ஜூன் 09 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** எல்லாவிதமான வழிகள் மற்றும் செயல்பாடுகளின் விஸ்தீரணத்திற்காக கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

ஜூன் 10 ⇨ சகலவிதமான நிலைகளிலும் மற்றும் திட்டமிடுதலிலும் நமது நாடு ஒற்றுமையுடனும், முன்னேற்றத்துடனும் காணப்பட ஆண்டவரை நோக்கி ஜெபிப்போம்.

ஜூன் 11 ⇨ நமது நிறுவனத்திற்காகவும், நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்காகவும் மற்றும் அவர்களது குடும்பத்திற்காகவும் ஜெபிப்போம்.

ஜூன் 12 ⇨ அனைத்து சமயங்களின் ஒற்றுமைக்காக தேவனிடத்தில் ஜெபிப்போம்.

ஜூன் 13 ⇨ கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் கர்த்தரிடம் விசுவாசத்தோடு ஜெபிப்போம்.

ஜூன் 14 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இந்திய நாட்டின் பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட நமக்கு வாய்ப்பளிக்க வேண்டி கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

ஜூன் 15 ⇨ உலகமெங்கிலுமுள்ள எல்லா மக்களும் பாதுகாப்போடு வாழ்ந்திட ஜெபிப்போம்.

ஜூன் 16 ⇨ நமது பங்காளர்கள், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்காக ஜெபிப்போம்.

ஜூன் 17 ⇨ ஆண்டவரது இராஜ்யம் பூமியில் நிலைப்பட மேலும் கூடுதலான தரிசனங்களை நம்மிடத்தில் அருளவேண்டி ஜெபிப்போம்.

ஜூன் 18 ⇨ நமது தலைமைப் போதகர் மற்றும் குடும்பத்தினர் அனைவரையும் சகலவிதமான தீய சக்திகளின் வல்லமைக்கு விலக்கிக் காத்திட ஜெபிப்போம்.

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

அவற்றிற்கான மருந்து மற்றும் தடுப்பூசிகள் செய்து கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளையிடப்பட்டு வருகிறது!

### ஐந்தாவது முத்திரை!

இந்த முத்திரை உடைக்கப்படும்போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்காகவும், அவருடைய வசனத்திற்காகவும் உபத்திரவ காலத்தில் எழும்பி நிற்பவர்கள் அநேகர் கொல்லப்படுவார்கள். இவர்கள் இயேசுவின் இரகசிய வருகையில் கைவிடப்பட்டவர்கள். இது அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தின் முதற்பகுதியில் நடைபெறும். இவர்கள் உயிர் பெற்று பரலோகத்தில் பலிபீடத்தின்கீழ் கூட்டமாக இருப்பதை யோவான் தரிசனத்தில் கண்டார். இவர்கள் பரலோகத்திற்கு வெளியில் தான் நிற்கிறார்கள். இவர்கள் பலிபீடத்திலிருந்து பரிசுத்த ஸ்தலத்திற்கும் பின்பு தேவன் வாசஞ்செய்யும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்ல வேண்டும்!

இவர்கள், பலிபீடத்திற்குக் கீழ் இருந்து கொண்டு, "தேவனே எங்கள் இரத்தம் சிந்தியவர்கள் மேல் நியாயத் தீர்ப்பை எப்போது செய்வீர்?" என்று கேட்கும்போது இன்னும் சிலகாலம் தங்கியிருக்கச் சொல்லப்பட்டது. காரணம், இவர்களுடைய பட்டியல் இன்னும் நிறைவடைய வேண்டும்! அதுவரை காத்திருங்கள் என்று சொல்லப்பட்டது. அதாவது, அந்திக்கிறிஸ்துவின் 7 வருட ஆட்சிக்காலம் முடிவடைய வேண்டும். இவர்களுக்கு வெண்மையான இரட்சிப்பின் வஸ்திரம் கொடுக்கப்பட்டது!

### ஆறாவது முத்திரை!

இதுவரை உடைக்கப்பட்ட முத்திரைகளில் இந்த முத்திரை உடைக்கப்படும்போது மிகுந்த அழிவும், சேதமும் ஏற்படும்! என்ன நடக்கும் என்பது மத்தேயு 24 ஆம் அதிகாரத்திலும் வெளிப்படுத்தல் 6:12-17 வரை கொடுக்கப்பட்டுள்ளது. அவை யாவன:

1. ஒரு பெரிய பூமியதிர்ச்சி ஏற்படும், சூரியன் கறுப்பாக மாறி கறுப்பு கம்பளி போலாகும். சந்திரன் இரத்தம் போலாயிற்று.
2. வானத்தின் நட்சத்திரங்கள் பூமியில் விழும். அவை பெருங்காற்றினால் அத்திமரம் அசைக்கப்படும்போது அதின் காய்கள் உதிருவது போல் இருக்கும்.
3. வானம் சுருட்டப்பட்ட புத்தகம் போலாகி விலகிப்போகும், மலைகள், தீவுகள் யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்று போகும்.
4. பூமியின் இராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத் தலைவர்களும், பலவான்கள், அடிமைகள் யாவரும் குகைகளிலும், கன்மலைகளிலும் ஒளித்துக் கொண்டு இருப்பார்கள்.
5. பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி, நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள் என்பார்கள்.
6. அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது. யார் நிலைநிற்கக் கூடும் என்பார்கள்.

எனக்கன்பானவர்களே! தற்போது உலகில் நடக்கும் அழிவுகள், ஏற்கனவே நடந்தவை மற்றும் இனி நடக்கப் போகிறவை. இவை 50 வருடங்களுக்கு முன் இல்லை, இவை யாவும் அதற்குப்பின் நடப்பவையே! இங்கு வரவிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள அழிவுகளின் உச்சக்கட்டம் (crescendo) கூடிய விரைவிலும் நடைபெறலாம் அல்லது இனிவரும் 50-100 வருடங்களிலும் நடந்து நிறைவு பெறலாம். கர்த்தருக்கு ஒரு நாள் 1000 வருடங்கள் போலவும், 1000 வருடங்கள் ஒரு நாள் போலவும் இருக்கும்! அவர் அநாதியாய், அதாவது சிருஷ்டிப்புக்கு முன்பும் உலக அழிவிற்குப் பின்பும் என்றென்றும் (Eternal) இருப்பார்!

### ஏழாவது முத்திரை!

ஏழாம் முத்திரை உடைத்தபோது பரலோகத்தில் அரைமணிநேரம் அமைதி ஏற்பட்டது (வெளிப்படுத்தின விசேஷம் 8:1). உலகம் மாபெரும் அழிவில் இருப்பதால், அரைமணி நேரம் அமைதி என்பது, இவற்றை விடப் பெரிய அழிவு வரப்போகிறதை அறிவிக்கிறதாயிருக்கிறது! அதாவது, இனி எக்காளம் ஊதுதல், கோபக்கலசம் பூமியின் மேல் ஊற்றப்படுவதால் மாபெரும் அழிவு ஏற்பட இருப்பதை அறிவிக்கிறது! என வேதப்பண்டிதர்கள் கூறுகிறார்கள். எக்காளம் அந்திக்கிறிஸ்துவின் 7 வருட ஆட்சியின் முதற்பகுதியில் (3½ வருடங்களில்) நடைபெறுமென்றும், கோபக்கலசங்கள் ஊற்றுதல் இரண்டாவது பகுதியில் (இரண்டாம் 3½ வருடங்களில்) ஊற்றப்படும் என்றும் கூறுகிறார்கள்! அந்திக்கிறிஸ்துவின் ஆட்சி பூமியிலே தொடங்கப்படும் முன்பு இயேசுவின் இரண்டாம் வருகையின் இரகசிய வருகை நடைபெறுமென்றும், அப்போது இயேசு சபையை (பரிசுத்தவான்கள்) எடுத்துக்கொள்வார்! இதனை பெரும்பாலோர் எதிர்பார்க்கிறார்கள். நாமும் அப்படித்தானே!

இனி, தற்போது நம் கண்முன் நடக்கின்றவை 50 வருடங்களுக்குமுன் நடைபெறவில்லை. ஒன்றை அறிந்து கொள்ள வேண்டும், அதாவது முதல் நான்கு முத்திரைகள் உடைக்கப்பட்டதால் உள்ள விளைவுகள் நின்றுபோகவில்லை; ஆனால் அவற்றின் தாக்கமும் பூமியில் தற்போதும் நடந்து கொண்டிருக்கின்றது.

### பூமியதிர்ச்சி, சூரியன் கறுப்பாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறுதல்!

பூமியதிர்ச்சிகள் முதல் நூற்றாண்டிற்கு முன்பே நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அவை தற்போது ஏற்படுகிறவைபோல் சக்தி வாய்ந்தவையாக இல்லை. தற்போது ஏற்படுபவை மிகுந்த பொருட்சேதத்தையும், மக்கள் சேதத்தையும் ஏற்படுத்துபவையாக உள்ளன. 2004 ஆம் வருடத்தில் இந்தோனேசியாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த பூகம்பம் ஆழிப்பேரலையை (tsunami) ஏற்படுத்தியதுடன் கடற்கரை நாடுகளான இந்தியா, ஸ்ரீலங்கா, தாய்லாந்து போன்ற பல நாடுகளில் பெரும் அழிவை ஏற்படுத்தியது. இதனால், இலட்சக்கணக்கான ஜனங்கள் மாண்டு, மடிந்தனர். இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் பெரிய அழிவை ஏற்படுத்தி சுமார் 1½ இலட்சம் மக்களைக் காவுகொண்டது.


## நெகேமியா வேதாகமக் கல்லூரி

**அழைப்பின் எதிரொலி**

(முழுநேரம் - ஹிந்தி & மாலைநேரம் - தமிழ்)

Asia Theological Association (ATA)
*Registered Candidate for Membership*

**23வது பட்டமளிப்பு விழா**

இடம் : பாலர் கல்வி நிலைய அரங்கம்
எம். ஆர். சி. சென்டர், அனிதா மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகம்
5/6, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை - 600 007.

3, ஜூன் 2022
வெள்ளிக்கிழமை,
மாலை 5:00 மணி

ஜெபியுங்கள்!
பங்குபெறுங்கள்!!

- 2022 - 2023 ம் வருட மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது!
- அர்ப்பணிப்புள்ள மாணவர்களை தெரியப்படுத்துங்கள்!!
- முழு இந்திநேர மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை உண்டு!!!
- 2022-23-ம் ஆண்டிற்கான வகுப்புகள் 06.06.2022 அன்று ஆரம்பிக்கப்படும்!!!!

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.

பல்வேறு வகையான தாக்கத்துடனான பூமியதிர்ச்சிகள் உலகின் பல பகுதிகளில் அவ்வப்போது நடைபெறுகின்றன. இவற்றால் ஏற்படும் அழிவைப் பார்க்கும்போது, மனிதன் இவற்றிற்குமுன் பலமற்றவன் (Vulnerable) என்பதைக் காட்டுகின்றன.

நாம் காணும் பால்வெளியில் (Milky way) சூரியன் பெரிய கோளமாக உள்ளது. இங்கிலாந்து தேசத்தின் ஸ்டீபன் ஹாக்கின்ஸ் (Stephen Hawkins) என்ற விஞ்ஞானி கடந்த 50 வருடங்களாக சூரியனின் மேல்பகுதியில் கறுப்புப் பள்ளங்கள் ஏற்பட்டு வருகின்றன என்றார். இது தொடக்கத்தில் எவராலும் நம்பப்படவில்லை. ஆனால் நாளடைவில் பல விஞ்ஞானிகளும், நாசாவும் (NASA) இதனை உறுதி செய்துள்ளார்கள்! இந்த கறுப்புப் பள்ளங்கள், சூரியனில் உள்ள ஹைட்ரஜன் (Hydrogen) வாயு எரிந்து போவதால் சூரியனின் மேற்பரப்பில் ஏற்படுகின்றன. இவை சிறிய கறுப்புப் பள்ளங்களிலிருந்து பெரிய கறுப்புப் பள்ளங்கள் வரையிலும் ஏற்படுகின்றன. இந்த கறுப்புப் பள்ளங்களால் பக்கத்து கோள்களில் வெப்பம் அதிகரிக்கின்றது; மேலும் கதிர்வீச்சும் (radiation) ஏற்படுகிறது. இவை சூரியனுக்கு அருகில் உள்ள கோள்களில் அதிகக் கேட்டை விளைவிக்கிறது. பூமி மூன்றாவது கோள் ஆகும். பூமி ஆபத்து வளையத்திற்கு உட்பட்டே உள்ளது!

சமீபத்தில் இந்த கதிர்வீச்சு 29–01–2022–இல் ஏற்பட்டது. இது அண்டார்டிகாவையும், அதன் அருகாமை நாடான கிரீன்லேன்ட் (Greenland) தீவையும் வெகுவாக பாதித்தது. பொதுவாக இத்தீவு பனியால் எப்போதும் மூடப்பட்டிருக்கும்; இங்கு மழை பெய்யாது. ஆனால், சமீபத்தில் அதிசயமாக மழை பெய்தது. இதனால் இத்தீவு பச்சை நிறமாக காட்சியளித்தது. சூரியக் கதிர் வீச்சாலும் (Solar radiation), சூரியனிலிருந்து வெளியாகும் அதிகப்படியான வெப்பத்தாலும் அண்டார்டிகா பகுதி வெப்பமாகி பனிப்பாறைகள் அதிகஅளவில் உருகி, கடல்மட்டத்தை உயரச் செய்கிறது. இதனால், கடற்கரை நாடுகள் அதிகமாய் பாதிக்கப்பட்டு வருகின்றன. கடற்கரைப் பகுதியில் வசித்துவரும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுமாறு ஐக்கிய நாட்டினால் அறிக்கை தரப்பட்டுள்ளது. இதனால், இந்தோனேசியாவின் தலைநகர் ஜெகார்த்தா (Jagartha) நாட்டின் உட்பகுதியில் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சுமார் 20 இலட்சம் ஜனங்கள் மாற்றப்பட்டு விட்டனர்!

சூரியனின் மேல்பகுதியில் தற்போது 12% இடம் கறுப்புப் பள்ளங்களாக மாறிவிட்டன. இது 100% த்தை எட்டும்போது, வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள அழிவுகள் நிறைவேறும்!

இந்த உலகம் சூரிய வெப்பக் கதிர்வீச்சால் தாக்கப்பட கூடுதல் சாத்தியங்கள் உண்டு. இந்த உலகம் உண்டாக்கப்பட்டபோது, தேவனாகிய கர்த்தர் இந்த பூமியைப் பாதுகாக்க மூன்று பாதுகாப்பு கேடயங்களை ஏற்படுத்தினார். முதல் அடுக்கு தண்ணீரால் நிரப்பப்பட்டிருந்தது. ஆனால், கர்த்தர் நோவாவின் நாட்களில் உலகத்தை அழித்ததால் இந்த பாதுகாப்பு அடுக்கு அதற்குப்பின் இல்லாமற் போய்விட்டது. இரண்டாம் அடுக்கு ஓசோன் (Ozone) வாயு. இதுவும் தொழிற்சாலைகளால் வெளிவிடப்படும் அரிக்கும் வாயுக்களாலும் (toxic gases) மற்றும் நச்சுக்காற்றுகளாலும் முற்றிலும் அரிக்கப்பட்டு தற்போது இல்லாமற் போயிற்று. **இது நாம் உயிர் வாழும் நாட்களில் ஏற்பட்ட அழிவு!** இனி இருப்பது ஒன்றுதான், அதாவது காந்த அடுக்கு (magnetic field) பாதுகாப்பு. தற்போது வெப்பக் கதிர்வீச்சுகளிலிருந்து மற்றும் நச்சுக் காற்றுகளிலிருந்து நம்மைப் பாதுகாக்க இந்த காந்த அடுக்கு (magnetic field) ஒன்றுதான் உள்ளது. அதுவும் தொடர்ந்த தொழில்மயமாக்குவதால் அதிக அளவு நச்சுக்காற்று வெளியேறுவதால் அவை இதன் பாதுகாப்புக் கேடயத்தை வேகமாக அரித்து வருகின்றன.

ஐக்கிய நாடுகளின் சபை (UNO) எல்லா நாடுகளுக்கும் குறிப்பாக தொழில் வளர்ச்சி மிகுந்த நாடுகள் இன்னும் சில வருடங்களில் நச்சுவாயு வெளியிடப்படாதவைகளாய் (zero emission) இருப்பதை உறுதி செய்யுமாறு கேட்டுள்ளது. இந்தியா இதனை அடைய மேலும் 30 ஆண்டுகள் கோரியுள்ளது.

சூரியனின் மேற்பரப்பில் வெப்பம் அதிகரித்து வருவதால் ஆர்ட்டிக் பகுதிகளிலும், மற்ற பகுதிகளிலும் பனிப்பாறைகள் வெகுவாக உருகி வருவதோடு வெப்பச் சலனமும் அதிகரித்து வருகிறது. இதனால் கடந்த வருடத்தில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் சீனா போன்ற தேசங்களும் வரலாறு காணாத மழையைக் கண்ணுற்றன. சீனாவில், கடந்த 1000 வருடங்களில் இல்லாத மழை பெய்து பெரும்பாலான இடங்களை மூழ்கடித்துள்ளது!

சூரியனின் மேற்பரப்பில் ஏற்பட்டுள்ள கறுப்புப் பள்ளங்கள் அதிகரித்து வருவதால் வரும் நாட்களில் அதிகப்படியான கதிர்வீச்சு ஏற்பட்டு, ஆழிப்பேரலைகள் உருவாக வாய்ப்பு அதிகரித்து வருகிறது. உலக நாடுகள் இதனால் பீதியடைந்து செய்வதறியாது திகைத்து நிற்கின்றன. இவர்கள் தங்களுக்கு மிகவும் அருமையான பொருட்களைப் பாதுகாக்கவும் மக்களில் ஒரு பகுதியினரையாவது பத்திரப்படுத்திடவும் புதிய யுக்திகளைக் கண்டுபிடிக்க முயன்று வருகிறார்கள்.

அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகள் ஒவ்வொன்றும் நூற்றுக்கு அதிகமான பங்கர்களை (Bunkers) மலைகளுக்கும் குன்றுகளுக்கும் அடியில் (1400 அடி முதல் 2000 அடிவரை) தோண்டி சிறு பட்டணம் அளவிலான இந்த பங்கர்களை ஏற்படுத்தி வருகின்றன. இவற்றில் மனிதர் ஆறுமாதங்கள்வரை தங்குவதற்கான எல்லா வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. ஒரு நபருக்கு 4–6 மாதங்களுக்கு தங்க ஆகும் செலவு இரண்டு இலட்சம் டாலர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. விரும்புவோர் பதிவு செய்து வருகிறார்களாம்! தனியாரும் இந்த விளையாட்டில் இறங்கியுள்ளார்களாம்!

ஐரோப்பிய ஐக்கியத்தில் உள்ள பெரும்பாலான நாடுகள் மக்களின் பாதுகாப்புக்காக இத்தகைய பங்கர்களை பெருமளவில் ஏற்படுத்தி வருகின்றனவாம்! நார்வே, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் முன்னணியில் உள்ளனவாம். ஆனால் கோடி மதிப்பு பெறும் (Million Dollar Question) வினாவிற்கு இன்னும் பதில் சொல்லப்படாமலேயே உள்ளது! பெருமளவில் பூமியதிர்ச்சியும், எரிமலைகளும் ஏற்பட்டால் இந்த பங்கர்கள் எந்த அளவிற்குப் பாதுகாப்பு கொடுக்கும்? மேலும், பூமி பெரிய அளவிலான அழிவைச் சந்திக்கும்போது 4–6 மாதங்களுக்குப் பாதுகாப்பு போதுமா? கர்த்தருடைய திட்டத்தை மனிதர்களால் ஒருபோதும் முறியடிக்கமுடியாது!

பருவநிலை மாற்றத்திற்கான உலகளாவிய அமைப்பு 28, பிப்ரவரி 2022 – இல் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அடுத்த 20 வருடங்களில் 1.5%–க்கும் அதற்கும் மேலான வெப்பத்தை உலக நாடுகள் சந்திக்க இருக்கின்றனவாம்! இதனால் எதிரிடையான பாதிப்பை இயற்கையும் மனிதர்களும் சந்திக்க நேரிடும். இந்தியாவின் பல பட்டணங்கள் 35–36° C வெப்பத்தைக் கடந்து விட்டன. உலகம், மக்கள் வாழ்க்கைக்கு தகுதியற்றதாக மாறி வருகின்றதா?

மேலும் மக்களை எதிர்நோக்கியுள்ள பெரிய ஆபத்தென்னவென்றால், பூமிக்கடியில் பராமரிக்கப்பட்டு வரும் அணு ஆயுதங்கள் இந்த உலகத்தை 200 தடவை அழிவிக்கப்போதுமானதாக உள்ளதாம்! ஒரு பெரிய பூமியதிர்ச்சி அல்லது எரிமலை வெடித்துச் சிதறினால் பூமிக்கடியில் உள்ள அணுஆயுதங்கள் என்னவாகும்? உலகில் தற்போது அனேகமாக எல்லா வீடுகளுக்கும் எரிவாயு (LPG) குழாய் மூலம் இணைப்பு தரப்பட்டுள்ளது. இந்தியாவும் இதில் ஆர்வம் காட்டி வருகிறது. ஒரு பேராபத்து ஏற்பட்டால் இந்த எரிவாயு இணைப்புகளும், எரிவாயுவை ஆங்காங்கே சேமிக்க வைக்கப்பட்டுள்ள பெரிய (LPG) கிடங்குகளும் என்னவாகும்? இவைகளைப் பார்க்கும்போது மெய்யாகவே உலகம் ஒரு பெரிய எரிமலைமேல் (ஆபத்தின்மேல்) நிலைகொண்டிருப்பதாகத் தெரியவருகிறது!

சிவப்புச் சந்திரனை உலகத்தின் பல பகுதியிலுள்ள மக்கள் பார்த்துள்ளனர். இந்தியாவில் சமீபத்தில் காணப்பட்டதை மக்கள் வெறுங்கண்களால் பார்க்க முடிந்துள்ளது. இவற்றின் தோற்றம் (frequency) சமீபகாலத்தில் அதிகரித்து வருகிறது.

கிளைக்கோள்களும், துணைக்கோள்களும் (asteroids and meteors) அவ்வப்போது பூமியின்மேல் விழுவதைப் பார்த்திருக்கிறோம். சமீபத்தில் 6 டன் எடையுள்ள துணைக்கோள் ஒன்று சமுத்திரத்தில் விழுந்துள்ளது. இவை பூமியின்மேல் விழுவது தற்போது அதிகரித்து வருகிறது. வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது போல் இவை அத்திமரம் பலத்தக் காற்றால் அசையும்போது அவை உதிர்வது போன்று விழுங்காலம் அதிவிரைவில் ஏற்படும்!

பூமியில் வெப்பம் அதிகரித்து வருவதால், வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது போல், வானங்கள் புத்தகம்போல் சுருட்டப்படும்! பெரிய பூமியதிர்ச்சிகளாலும் எரிமலை வெடிப்பதாலும் மலைகளும் குன்றுகளும் பெயர்ந்து போகும்.

இப்பெரிய அழிவுகளால் மக்கள் தங்கள் இல்லங்களை விட்டுவிட்டு வெளியில் ஓடி அலைவார்கள்! இவர்கள் மலைகளையும் குன்றுகளையும் பார்த்து எங்கள்மேல் விழுங்கள் என்பார்கள்! அந்நாட்களில் மரணம் இவர்களை விட்டு விலகிப் போகும்!

வெளிப்படுத்தல் 13:16 – 18 வசனங்களின்படி பெரியோரானாலும்,

தொடர்ச்சி 9–ம் பக்கம்.....



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## உருவாக்கும் தேவன்

கர்த்தருடைய கிருபையால் 1962–ம் ஆண்டு முதல் 1965–ம் ஆண்டுவரை 9–ம் வகுப்பிலிருந்து 11–ம் வகுப்பு வரை என் சொந்த ஊருக்கு அடுத்த ஊரான இரணியலில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியிலும், தொடர்ந்து P.U.C. வகுப்பை அடுத்த ஊரான இலட்சுமிபுரத்தில் உள்ள இலட்சுமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், கல்வியைத் தொடர தேவன் உதவி செய்தார். உயர்நிலைப்பள்ளியில் என்னுடன் பயின்ற சகோதரரும், நீண்ட காலம் ஜமுனா மருத்தூர் என்ற இடத்தில் உள்ள மலைவாழ் மக்கள் மத்தியில் மிஷனரி ஊழியம் செய்துவிட்டு, தற்சமயம் ஏற்காடு என்ற பகுதியில் ஊழியம் செய்து வருகிற Rev. Dr. A. செல்வராஜ் அவர்கள் எனக்கு நல்ல ஆவிக்குரிய நண்பராக தேவனால் அருளப்பட்டவர்கள்.



*Rev. Dr. A.* செல்வராஜ்

சகோ. Rev. Dr. A. செல்வராஜ் அவர்கள் எனக்கு நல்ல நண்பர் மட்டுமல்ல, என்னை தேவ ஊழியத்தில் உற்சாகப்படுத்துகிறவராயிருந்தார்கள். அவர்கள் ஜெப வாழ்க்கையிலும் ஊழிய வாழ்க்கையிலும் என்னை உந்தித்தள்ளி என் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார்கள். பிற்காலங்களில் இவர்கள் என் ஊழியத்தில் பக்கபலமாகவும், உடன் ஊழியராகவும் மாறிவிட்டார்கள். அந்த வாலிபக் காலத்தில் உலகம், மாம்சம், பிசாசு ஆகிய எதிர்சக்திகளுக்கு விலக்கி பரிசுத்தப்பாதையில் தேவனாகிய கர்த்தர் எங்களை வழிநடத்தினார். உலகப்பிரகாரமான சினிமா, விளையாட்டுகள், களியாட்டுகள், போதைப் பொருட்கள், கெட்டப்பழக்கவழக்கங்கள் போன்ற எதற்குமே நாங்கள் சற்றேனும் அடிமைகளாகாமல், பரிசுத்தப்பாதையில் வளர தேவன் உதவினார்.

இந்தத் தருணத்தில் என்னுடைய குடும்பம் பொருளாதாரத்தில் சற்று பின்னடைவில் இருந்தது. ஆதலால், நான் கல்லூரியில் படிக்கும் நாட்களில், பக்கத்து ஊரான உடையார்விளையில் வாழ்ந்த என் பெரியம்மா திருமதி ரோஸ்லெட் தேவகடாட்சம் அவர்கள் எனக்கு தினமும் மதிய உணவு கொடுத்து ஆதரித்தார்கள். அவர்கள் பிள்ளைகள் பிரின்ஸ் அண்ணன், ஜாஸ்மின் ஃப்ளோராள் அக்கா, ஒய்ஸ் தம்பி மற்றும் டாட்டி தங்கை ஆகியோர் என்னை ஒரு சிறிய வருங்கால ஊழியனாக பாவித்து மகிழ்ந்தனர். கர்த்தருக்கு பயப்படும் வாழ்க்கை முறையை நான் அவர்களிடம் கற்றுக் கொண்டேன்.

இந்த சூழ்நிலையில் என் உள்ளத்தில் எப்போதும் ஒரு ஆழமான ஆசை வளர ஆரம்பித்தது. அதாவது, நான் ஒரு கறைதிரையற்ற நல்ல மனிதனாக வாழவும், இந்த உலகத்தைப் படைத்துப் பராமரிக்கும் ஆண்டவருக்கு ஏதாவது ஒரு நற்காரியம் செய்யும் உயர்ந்த பண்பாடுள்ள தேவ மனிதனாகவும் வாழ வேண்டும் என்பதுதான் அந்த ஆசையாக இருந்தது. **"...தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்"** (பிலிப்பியர் 2:13) என்ற வேத வார்த்தையின்படி, தேவனுக்காக உண்மையாய் வாழ்ந்து அவருக்காக எதையாவது சாதிக்க வேண்டும் என்ற இலட்சியம் என்னை ஆட்கொண்டது. இந்த இலட்சியத்தை நிறைவேற்ற என் உலகப்பிரகாரமான நண்பர்களையும், உறவினர்களையும் இழக்கவும் என்னை ஒப்புக்கொடுத்தேன். அப்படியே பலரையும் இழந்தேன்.

எனவே, என் வாலிப காலத்திலிருந்தே எனக்கு ஆண்டவரைப் பற்றிய காரியங்களில் தவிர, வேறு எதிலும் நாட்டம் இல்லாமலும், வேறு காரியங்களில் அறிவு இல்லாமலும் இருந்தேன். என்னுடைய பள்ளி ஆசிரியர்களிலும் சிலர் என்னை ஒரு பேதை (அறிவில் குன்றியவன்) என்று எண்ணியதும், என்னை அவ்விதம் நடத்தியதும் உண்டு. ஆனால், **"நானோ இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்"** (1 கொரிந்தியர் 2:2). இந்த விதத்தில் என் மூளையையும், என் இருதயத்தையும் ஆண்டவர் தம்முடைய காரியங்களை மட்டுமே சிந்திக்கவும், அவற்றோடு ஒத்துப்போகவும் பண்ணியிருந்தார். இதை நான் ஒரு பெலவீனமாகக் கருதாமல் பெரும்பாக்கியமாகவே கருத தேவ ஆவியானவர் எனக்குத் துணைபுரிந்தார்.



*Pr. S.* சாம் செல்வ ராஜ்
(1966ம் வருட புகைப்படம்)

உதாரணமாக, ஏதாவது எதிர்பாராதவிதங்களில் பள்ளியில் அல்லது வாகனப் பிரயாணங்களின்போது ஒரு படக்காட்சியையோ அல்லது சுவரொட்டியையோ பார்க்கும்படி அல்லது கதையைக் கேட்கும்படியான கட்டாயம் நேர்ந்தால், அந்த காட்சிகளையும், செய்திகளையும் என் கண்கள் பார்க்கும். காதுகள் கேட்கும். ஆனால், அவை எதுவும் என் மூளைக்குள்ளேயோ அல்லது இருதயத்திற்குள்ளேயோ செல்லுவது இல்லை. அவைகளுக்கு ஒருவிதமான தடை (rejection) எனக்குள் இருந்ததை நான் உணர்ந்தேன். அவைகளைப் பார்க்கப் பார்க்க அல்லது கேட்கக் கேட்க என் மனதிலிருந்து அவை அழிந்து கொண்டே (erase) செல்லும். என்னிடம் திருப்பிக் கேட்டால் சொல்லத் தெரியாது.

**"அந்தப்படி: ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது"** (1 கொரிந்தியர் 1:19).

எனவே, உலக மனிதர்களால் நான் ஒரு பேதையாகவே அந்நாட்களில் கருதப்பட்டேன். ஆனால், இதைக்குறித்து நான் சற்றேனும் கவலைப்படவே இல்லை. ஏனென்றால், எனக்குள் ஒரு சர்வவல்ல ஆண்டவர் வாழ்வதையும், அவர் என்னை ஏதோ ஓர் உயர்ந்த இடத்திற்கு அழைத்து செல்கிறார் என்பதையும் என் உள்ளம் திட்டமாய் அறிந்திருந்தது. "களவையும் கற்று மற" என்ற உலக மக்களின் பழமொழி எனக்கு ஏற்புடையதாக இல்லை. உலகத்தில் வாழ்ந்தாலும், ஒரு மாதிரியான வேறுபடுத்தப்பட்ட வாழ்க்கையில் தேவன் என்னை நடத்தினார்.

**"எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்"** (1 கொரிந்தியர் 2:9–12)



திரு. *C.* செல்வம்

இந்த சூழ்நிலையில், எதிர்காலத்தில் தேவன் என்னை ஏதோ ஒரு காரியத்தில் செயல்படும் நபராக மாற்றப்போகிறார் என்பதை உணர்ந்த காலஞ்சென்ற திரு. C. செல்வம், **Commercial Institute, Neyyoor** என்ற கல்வி ஸ்தாபனத்தின் நிறுவனரும், தேவனுக்குப் பயந்தவருமாகிய என் தகப்பனாரின் நண்பர் முன்வந்து, அலுவலக நிர்வாகம், தட்டச்சு (ஆங்கிலம் மற்றும் தமிழ்) மற்றும் சுருக்கெழுத்து (தமிழ் மற்றும் ஆங்கிலம்) ஆகியவற்றில் புலமை பெற உதவினார்கள். அவர்கள், "நீ ஓர் வல்லமைமிக்க தேவ ஊழியனாகவும், நிர்வாகியாகவும் வருவாய்" என்று அடிக்கடி சொல்லியதுடன், அவர்களுடைய உதவியாளரும், தற்போதைய **சென்னைவாழ் கன்னியாகுமரி கிறிஸ்தவர்கள் மன்றத்** தலைவருமான திரு. கில்பர்ட் ராய் அவர்களிடம் என்னை நன்கு கவனித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்கள். இவர்கள் என்னை கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்ட மற்றும் முதிர்வயதுடைய பெண் ஊழியரான **எமியம்மாள் சன்னியாசினி** அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.



*Dr.* கில்பர்ட் ராய்

**"மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின் மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ?"** (ரோமர் 9:21) என்கிற வசனத்தின்படி என்னை தேவன் வனைய ஆரம்பித்தார். ♦ ♦ ♦

... 7-ம் பக்கத் தொடர்ச்சி

சிறியோரானாலும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நெற்றியிலாவது வலது கரத்திலையாவது ஒரு முத்திரை பதித்துக் கொள்ள வேண்டும். இதனை நிறைவேற்றும் பணியில் தற்போது பூமியிலிருக்கும் அந்திக்கிறிஸ்துவின் முகவர்கள் ஒவ்வொருவர் தனிப்பட்ட விவரங்களை எண்ணிலக்கத்தில் (digitalisation) மாற்றுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். பொதுவாக எல்லா நாடுகளும் நமக்கு ஆதார் போன்ற அடையாள அட்டைகளை தங்கள் தங்கள் மக்களுக்கு வழங்கி விட்டனர். ஒவ்வொருவரின் கைபேசி எண், வங்கிக்கணக்கு எண் போன்றவை 16 எண்களில் விரைவில் கொண்டு வரப்படும்! கணினியின் கோடு (code) எண்கள் இரண்டையும் சேர்த்தால் 18 எண்கள் ஆக மாற்றப்படும்! இதனை கணக்கிடும்போது, 666 என்ற எண் வரும்! என்பதைப் பார்க்கலாம். இதுதான் மிருகத்தின் எண் ஆகும்! ஒவ்வொருவரின் விவரங்களும் பயோசிப் (Biochip) என்பதில் ஏற்றி ஒவ்வொருவரின் வலது கை அல்லது நெற்றியில் பதிக்கப்படும். ஒவ்வொருவருக்கும் இந்த பயோசிப்பினை பதிவு செய்ய அந்திக்கிறிஸ்துவின் முகவர்கள் சரியான நேரத்திற்காகக் காத்திருக்கின்றனர்!

தற்போது, அந்திக்கிறிஸ்துவின் 7 வருட ஆட்சிக்கு எல்லாம் தயாராகி வருகின்றது. 6வது முத்திரை உடைக்கப்பட்டு அதன் விளைவுகளை நாம் தற்போது சந்தித்து வருகிறோம்! இதன் அதிகப்படியான பாதிப்பு இனி வரநேரிடலாம்.

## கர்த்தரின் நாள்!

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து 2000 வருடங்களுக்கு முன் இரட்சிக்கிறவராகவும், தாழ்மையுள்ளவராகவும் ஒரு கழுதை மீது அமர்ந்து சென்றார் (சகரியா 9:9). ஆனால், இயேசுவின் வெளிப்படையான இரண்டாம் வருகையில் அவர் கோடானு கோடி பரிசுத்தவான்களுடன் ஒலிவ மலையில் வந்து இறங்குவார் (சகரியா 14:4). அந்த நாள் கோபத்தின் நாளாகவும், அழுகையும், பற்கடிப்பும் நிறைந்ததாகவும் இருக்கும்!

**"அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும், அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள்"**

**"கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது; அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும்; தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம் பண்ணுவார்"**

– செப்பனியா 1:15,18.

**"இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்"** (வெளிப்படுத்தின விசேஷம் 1:7).

அந்திக்கிறிஸ்துவின் 7 வருட ஆட்சி முடிவடையும்போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களுடன் ஒலிவ மலையில் வந்திறங்குவார். இயேசுவின் முதலாம் வருகையில் அவர் சாந்த குணமுள்ளவராய், இரட்சிக்கிறவராய் கழுதையின்மேல் ஏறி பவனியாக வந்தார். ஆனால், தற்போதோ, அவர் இராஜாதிராஜாவாகவும், நீதியுள்ள நியாயாதிபதியாகவும் வருவார். இப்போது அவர் வெள்ளைக்குதிரை மீது வருவார்; அவருடைய பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரும் வெள்ளைக் குதிரைகளில் வருவார்கள்! (வெளிப்படுத்தின விசேஷம் 19:11–14). **"அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்"** (சங்கீதம் 96:13).

சபை வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டதும், கிருபையின் காலம் முடிந்துபோகும்; மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படி நியாயம் தீர்க்கப்படுவார்கள். இனி, கருணை எவருக்கும் காட்டப்படாது. ஒருவன், கிருபையின் நாட்கள் எடுக்கப்பட்டபின் இரட்சிக்கப்பட விரும்பினாலும் அவனது வேண்டுதல் கேட்கப்படாது; இனி ஒருவர் தேவ ராஜ்யத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றால் அவர் உபத்திரவக் காலத்தில் இரத்த சாட்சியாய் மரிக்க வேண்டும்!

கர்த்தரின் வருகை இனி எப்போது வருவதாக இருந்தாலும் வரலாம். ஆகவே, பூமியிலே இருக்கும் மாந்தர்களுக்கு **இதுவே அனுக்கிரகக் காலம், இதுவே இரட்சண்ய நாள்!**

கர்த்தரின் பெரிதான பரிசு (greatest gift) இரட்சிப்பு! (ரோமர் 6:23). இரட்சிப்பு ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டது. ஆகவே, ஒவ்வொருவரும் இரட்சிப்பை பெறவேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் இது இலவசமாக தரப்படுகிறது. இந்த உலகம் ஜீவனையும், மரணத்தையும் (Life and Death) நம்முன் வைத்துள்ளது. மரணத்தை வெறுத்து, ஜீவனை நாம் பற்றிக் கொள்ள வேண்டும். இதற்கு ஒவ்வொருவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்த்து, மனந்திரும்பி, பாவத்தை அறிக்கை செய்ய வேண்டும். தமது குற்றமற்ற இரத்தத்தால் இயேசு உங்கள் பாவங்களைக் கழுவ சித்தமுள்ளவராயிருக்கிறார்! வேதம் சொல்லுகிறது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது பாவங்களைச் சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7). நீ இன்று இதை செய்வாயாகில் கர்த்தரின் கோபத்தின் நாளுக்கு நீ தப்பித்துக் கொள்வாய். ஏனெனில், நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனற்றவர்கள், துன்மார்க்கர் மற்றும் கலகக்காரர் யாவரும் கர்த்தருக்கு முன்பாக நிற்க வேண்டும். அப்போது அவரவர் செய்த கிரியைகளைப் பற்றி கணக்கு ஒப்புவிக்க வேண்டும். இனி காலம் செல்லாது! இப்போதே செயல்படு!

அந்திக்கிறிஸ்து வெளிப்பட எல்லாம் தயாராகி விட்டது. அந்திக்கிறிஸ்துவின் 7 வருட ஆட்சி முடிவடையும்போது, இயேசு கிறிஸ்து இராஜாவாகவும், நீதியுள்ள நியாயாதிபதியாகவும் வெளிப்படுவார், அப்போது அந்திக்கிறிஸ்துவையும், அவன் முகவர்களையும் (அவனை ஆதரிக்கும் நாடுகள்) கர்த்தர் எதிர்கொள்வார். அந்திக்கிறிஸ்துவை சாத்தான் இயக்குகிறவனாக இருப்பான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களுடன் அர்மெகதோனில் (மெகிதோ பள்ளத்தாக்கு, இது இஸ்ரவேலில் உள்ளது) அந்திக்கிறிஸ்துவையும், அவன் ஆட்களையும் சந்திப்பார். யூதாவின் ஜனங்களும் இஸ்ரவேலின் ஜனங்களும் இயேசுவுக்கு உதவியாக இருப்பார்கள் (சகரியா 9:13). கர்த்தரே இஸ்ரவேலுக்கு ஆதரவாக யுத்தம் செய்வார் (எசேக்கியேல் 38, 39 அதிகாரங்களை வாசிக்கவும்). இது பெரும்பாலும் ஒரு நாள் யுத்தமாக இருக்கலாம். அந்திக்கிறிஸ்துவும்,

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

கள்ளத் தீர்க்கதரிசியும் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு, பிடிக்கப்பட்டு எரிகிற அக்கினியில் (hell fire) தள்ளப்படுவார்கள். சாத்தானும் பிடிக்கப்பட்டு பாதாளத்தில் தள்ளப்பட்டு ஆயிரம் வருடங்கள் அவன் வெளிவராதபடிக்கு முத்திரை போடப்படும்! (வெளிப்படுத்தின விசேஷம் 20:1,2).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை அதிசீக்கிரத்தில் உள்ளது. வருகையில் எடுத்துக்கொள்ளப்பட இப்போதே ஆயத்தப்படுங்கள்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

★★★

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
**E.mail : sam@echoofhiscall.org**

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❀ வருட சந்தா ரூ. 100/–** **❀ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், தேவ பிள்ளைகளாகிய நீங்கள் விரும்பி அளிக்கும் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் தங்களை ஏவும் விதத்தில் தாங்கள் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களைத் தாங்குங்கள். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**


## YOU CAN SEND YOUR DONATIONS ON ONLINE ALSO


**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th APRIL 2022**
**If un-delivered please return to:**



**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**


***JESUS LOVES YOU!***

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by him at **Echo of His Call Printers** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**